# DEPOSITION OF WITNESS

**Chapter XXIII Code of Criminal Procedure**
**In the Court of Judicial Magistrate No. II, Usilampatti**
**CC.No. 264/2015**
**Deposition of Witness for PW 3**

| | | | |
|---|---|---|---|
| Name | : ஆனந்தி | Caste | : |
| Father/Husband Name | : நாகராஜன் | Calling | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

**(A5 died. All accused absent)**

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1969 of the day of 30.06.2026**

**சாட்சி மனுவின் பேரில் மீண்டும் அழைக்கப்பட்டு எதிரிகள் 1 முதல் 3 தரப்பினர்களின் குறுக்கு விசாரணை :**

எங்களுக்கும், எதிரி அரவிந்த் குடும்பத்திற்கும் ஏற்கனவே பிரச்சனை இருந்து பேசிக்கொள்வதில்லை என்றால் சரிதான். ஊர் கோவில் திருவிழா நடந்த இடத்திற்கும் எனது வீட்டிற்கும் எவ்வளவு தூரம் இருக்கும் என்றால் 4 தெரு தள்ளி உள்ளது. சண்டை நடக்கும் போது நான் என் வீட்டில் இருந்தேன். சண்டை எவ்வளவு நேரம் நடந்து என்றால் 1/2 மணிநேரம் முதல் ஒரு மணிநேரம் வரை நடந்தது. அப்போது நான்கு ஐந்து நபர்கள் கூடியிருந்தார்கள். மேற்படி பொதுநபர்களின் பெயர்கள் தவமணி, ஆண்டிச்சாமி, குரும்பன் மற்றும் சிலர் இருந்தார்கள். புகார் கொடுக்கும் போது நான் இருந்தேனா என்றால் இருந்தேன். புகாரை நான்தான் கொடுத்தேன். புகாரை யார் எழுதிக்கொடுத்தார் என்ற விபரம் எனக்கு ஞாபகமில்லை.

சண்டை நடந்த அன்று கோவில் திருவிழாவில் ஆடல்பாடல் நிகழ்ச்சி நடந்தது என்றால் எனக்கு ஞாபகமில்லை.

திருவிழாவில் குடிபோதையில் எனது கணவர் பிரச்சனை செய்ததால் தான் அங்கிருந்தவர்கள் அவரை தாக்கினார்கள் என்றால் சரியல்ல. திருவிழாவில் வைத்து அடித்த போது தான் சட்டை கிழிந்தது என்றால் சரிதான். சண்டை நடந்தவுடன் நேராக காவல் நிலையம் சென்றோம். பின்னர் புகார் கொடுத்துவிட்டு மதுரை அரசு மருத்துவமனைக்கு அழைத்துச்சென்றோம். நான் சொல்வது போல் எனது கணவரையும், எங்களையும் யாரும் தாக்கவில்லை என்றாலும், எதிரிகளுக்கு எதிராக பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. நான் சொல்வது போல் எனது வீட்டருகே எந்த பிரச்சனையும் நடக்கவில்லை என்றால் சரியல்ல. வழக்கிற்காக பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எதிரிகள் எங்களை அசிங்கமாக பேசவில்லை என்றாலும், கொலை மிரட்டல் எதுவும் விடுக்கவில்லை என்றாலும், நான் சம்பவ இடத்தில் இல்லை என்றாலும் சரியல்ல.

**சாட்சி மனுவின் பேரில் மீண்டும் அழைக்கப்பட்டு 4வது எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை :**

நான் முதல் விசாரணையில் சொன்னது போல் தான் போலீசார் விசாரணையின் போதும் சொன்னேன் என்றால் சரிதான். 1வது எதிரிக்கும், 4வது எதிரிக்கும் விவாகரத்து ஏற்பட்டுவிட்டது என்றால் சரிதான். காயம்பட்டது எனது கணவர் என்பதால் அவருக்கு ஆதரவாக பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.